10 ஆம் வகுப்பு - தமிழ்த் திறனறித் தேர்வு 2024

இயல் -4 முழுவதும் வினா, விடை

1) அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக்கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறதே, அதனுள் பொதிந்திருப்பது

அ) மின்னணுப்புரட்சி ஆ) செயற்கைநுண்ணறிவு இ) வேர்டுஸ்மித் ஈ) வாட்சன்

2) சில நிமிடங்களில் இரண்டு கோடித்தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது

அ) வேர்டுஸ்மித் ஆ) ஐ.பி.எம் இ) பெப்பர் ஈ) வாட்சன்

3) கூற்று -1 இதழியலில், செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தக்க மாறுதல்களைச் செய்துவருகிறது.

கூற்று -2 தகவல்களைத் தந்தால் போதும் வேர்டுஸ்மித் சில புள்ளிகளை வைத்துப் படம் வரைகிறது.

அ) கூற்று 1,2 சரி ஆ) கூற்று 1 தவறு 2 சரி இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1,2 தவறு.

4) Digital Revolution என்பதன் தமிழாக்கம் தருக.

அ) மின்னணுப்புரட்சி ஆ) மின்னணுஇயந்திரம் இ) மின்னணுவணிகம் ஈ) மின்னணு சாதனம்

5) செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் இணைந்து செய்யாத பணி

அ) சதுரங்கம் விளையாடுகிறது ஆ) அழகான கட்டுரை உருவாக்குகிறது. இ) சமைக்கிறது. ஈ) படம் வரைகிறது.

6) ஒளிப்படங்கள், எழுத்துகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடைய மென்பொருளை வடிவமைப்பவர்

அ) ஆராய்ச்சியாளர் ஆ) விஞ்ஞானி. இ) மேலாளர் ஈ) தொழில்நுட்ப வல்லுநர்.

7) உரையாடு மென்பொருள் ஆங்கிலத்தில்...

அ) Video editor ஆ) Assistant இ) Scientists ஈ) Chatbot

8) ஒரு வினாடிக்கு வங்கியின் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடுவது

அ) Electronic Live Actor ஆ)Electronic Live Mechanical இ)Electronic Live Assistant ஈ) Election Live Assistant

9) இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன் - என்றவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) பெப்பர் ஈ) செயற்கை நுண்ணறிவாளர்

10) ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன்

அ) இலா ஆ) வாட்சன் இ) பெப்பர் ஈ) வேர்டுஸ்மித்

11) எதிர்காலத்தில் பயணிக்கும் ஊர்திகளை செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்குவதால் ஏற்படும் பயன்களுள் தவறானதைக் கண்டுபிடிக்க.

அ) விபத்துகள் குறையும் ஆ) எரிபொருள் தேவையில்லை இ) பயண நேரம் குறையும் ஈ) போக்குவரத்து நெரிசல் இருக்காது

12) நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் நம்மை அறியாமலேயே வளப்படுத்தி கொண்டிருப்பது

அ) இணையவணிகம் ஆ) மென்பொருள் இ) தொழில்நுட்பம் ஈ) செயற்கை நுண்ணறிவு

13) பண்டைய காலத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கியது எது ?

அ) காண்டன். ஆ) சூவன்செள இ) குப்லாய் ஈ) கானிஸ்நகர்

14) சீனாவிலுள்ள சிவன்கோவிலைக் கட்டிய சீனப்பேரரசர்

அ) சூவன்சே ஆ) காண்டன்கான் இ) குப்லாய்கான் ஈ) மாதாய்கான்

15) பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ...... திருமொழியாக உள்ளது.

அ) இரண்டாம் ஆ) மூன்றாம் இ) நான்காம் ஈ) ஐந்தாம்

16) பெருமாள் திருமொழியில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 100 ஆ) 105. இ) 108 ஈ) 110

17) வாளால் அறுத்து..எனத்தொடங்கும் பாடல் பெருமாள் திருமொழியின் ........ஆம் பாடல்

அ) 691 ஆ) 692 இ) 791. ஈ) 792

www.Padasalai.Net

18) மாளாத காதல் நோயாளன்- இத்தொடரில் மாளாத எனும் சொல்லின் பொருள்

அ) சுட்டாலும் ஆ) தெளியாத. இ) தீராத. ஈ) குறையாத

19) குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டு இறைவனை...........ஆக உருவகித்துப் பாடுகிறார்.

அ) தந்தை. ஆ) அன்னை இ) தோழன் ஈ) மகன்

20) குலசேகராழ்வாரின் காலம் ......... நூற்றாண்டு

அ) எட்டாம் ஆ) ஏழாம் இ) ஆறாம் ஈ) ஒன்பதாம்

21) விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல--- இத்தொடரில் ஊழ் எனும் சொல்லின் பொருள்

அ) வானம் ஆ) யுகம் இ) சிறப்பு ஈ) முறை

22) கருவளர் வானத்து இசையில் தோன்றி - இத்தொடரில் வினைத்தொகை அமைந்த சொல்லைத் தேர்ந்தெடுக்க

அ) கருவளர் ஆ) கருவானம் இ) வளர்வானம் ஈ) தோன்றி

23) விசும்பில் ஊழி - எனத்தொடங்கும் கீரந்தையார் பாடலில் ஊழி எனும் சொல் எத்தனை முறை வந்துள்ளது ?

அ) பத்து ஆ) ஏழு. இ) ஆறு ஈ) ஐந்து

24) செந்தீச் சுடரிய ஊழியும் ; தன்பெயல் தலைஇய ஊழியும்- இதில் தண்பெயல் என்பதன் பொருள்

அ) வானம் ஆ) குளிர்ந்த பனி. இ) குளிர்ந்த மழை. ஈ) வெள்ளம்

25) " அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் " - இத்தொடர் இடம்பெற்ற நூல்

அ) திருவாசகம் ஆ) பரிபாடல் இ) பெருமாள்திருமொழி ஈ) தேவாரம்

26) பரிபாடலில் தற்போது கிடைத்துள்ள பாடல்கள்

அ) 70. ஆ) 24. இ) 34 ஈ) 26

www.Padasalai.Net

27) அமெரிக்க வானியல் வல்லுநர் எந்த ஆண்டில் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார் ?

அ) 1922. ஆ) 1923. இ) 1924. ஈ) 1934

28) மீண்டும் பீடு உயர்பு ஈண்டி- இதில் ஈண்டி எனும் சொல்லின் பொருள்

அ) திரண்ட ஆ) செறிவான இ) வளமான ஈ) செறிந்து திரண்டு

29) பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, சமூக உறவு, அறிவாற்றல், இயற்கையைப்புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றை....... மூலம் அறியலாம்.

அ) திருவாசகம் ஆ) சங்க இலக்கியம் இ) பரிபாடல் ஈ) குறுந்தொகை

30) பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம்.....ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

அ) 1988. ஆ) 1963 இ) 1985. ஈ) 1980

31) இப்பேரண்டம் பெருவெடிப்பினால் உருவானது என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் விளக்கியவர்

அ) ஐன்ஸ்டைன் ஆ) நியூட்டன் இ) ஜான்வீலர் ஈ) ஹாக்கிங்

32) கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர்

அ) ஜான்வீலர் ஆ) ஹாக்கிங் இ) ஐன்ஸ்டைன் ஈ) நியூட்டன்

33) முன்னர் அண்டவெளியில் காணப்படும் கருந்துளை ......... என்று கருதப்பட்டது.

அ) படைப்பு ஆற்றல் ஆ) அழிவு ஆற்றல் இ) அணு ஆற்றல் ஈ) புவி ஆற்றல்

34) ஈர்ப்பலைகள் குறித்த முடிவுகளைக் கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாகச் சொன்னவர்

அ) நியூட்டன். ஆ) ஹாக்கிங் இ) ஜான்வீலர் ஈ) ஐன்ஸ்டைன்

35) ஸ்டீபன் ஹாக்கிங் பெற்ற விருதுகளுள் தவறானதைத் தேர்ந்தெடுக்க.

அ) உல்ஃப் விருது ஆ) காப்ளி பதக்கம் இ) கலீலியோ விருது
ஈ) ஐன்ஸ்டைன் விருது

36) ஹாக்கிங் தனது 60 ஆவது பிறந்த நாளை எவ்வாறு கொண்டாடினார் ?

அ) போயிங் 727 என்ற விமானத்தில் பறந்து கொண்டாடினார்.

ஆ) சூடான காற்று நிரம்பிய பலூனில் வானில் பறந்து கொண்டாடினார்.

இ) பள்ளி மாணவர்களுடன் கோளரங்கத்தில் மகிழ்வுடன் கொண்டாடினார்.

ஈ) தொலைக்காட்சி தொடரின் மூலமாக கொண்டாடினார்.

37) ஸ்டீபன் எழுதிய காலத்தின் சுருக்கமான வரலாறு என்ற நூல் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது ?

அ) 35. ஆ) 40. இ) 45 ஈ) 50

38) ஊனமோ உடலில் ஏற்பட்ட உறுப்பு இழப்போ, ஒருவருக்குக் குறையாகாது ; ஊக்கமும் உழைப்பும் சேர்ந்த ஆளுமைத் தன்மை இல்லாமல் இருப்பதே குறையாகும் - என்று கூறியவர்.

அ) ஐன்ஸ்டைன் ஆ) நியூட்டன் இ) கலீலியோ ஈ) ஸ்டீபன்

39) அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். கற்பனைத் திறனே இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது - யார் கூற்று ?

அ) ஹாக்கிங் ஆ) நியூட்டன் இ) ஐன்ஸ்டைன் ஈ) ஜான்வீலர்

40) காலத்தின் சுருக்கமான வரலாறு - என்ற நூல் வெளிவந்த ஆண்டு

அ) 1963 ஆ) 1983. இ) 1985. ஈ) 1988

41) " கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை

திரு மா வியல் நகர்க் கருவூர்.... இத்தொடர் இடம்பெற்ற நூல்

அ) புறநானூறு. ஆ) அகநானூறு. இ) நற்றிணை. ஈ) குறுந்தொகை

42) வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது - யார் கூற்று ?

அ) அப்துல்கலாம் ஆ) ஐன்ஸ்டைன் இ) ஹாக்கிங் ஈ) நியூட்டன்

43) அமெரிக்க அதிபர் நாளை தமிழகம் வருகிறார்- என்பது

அ) இடவழுவமைதி. ஆ) காலவழுவமைதி. இ) பால்வழுவமைதி. ஈ) திணைவழுவமைதி

44) தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோப்பு என்று கூறுதல்

அ) மரபு வழு ஆ) இட வழு இ) மரபுவழுவமைதி ஈ) மரபு வழாநிலை

45) தவறான முன்னிலை வினைகளைத் தேர்ந்தெடுக்க.

அ) வந்தீர் ஆ) நடந்தாய் இ) படித்தனர் ஈ) சென்றீர்கள்

46) புத்தகத்தின் மத்தியிலே மயிலிறகை வைத்தவர்கள் - முகப் புத்தகத்தைத் திறந்தவுடன் உணர்வுகளை வைப்பதேனோ - இக்கவிதையின் ஆசிரியர்

அ) டெபோரா பர்னாந்து ஆ) யுரேகா. இ) தாகூர் ஈ) ஹாக்கிங்

47) பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு பாடுவதும் வியப்போ ? என்று பாடியவர்

அ) டெபோரா. ஆ)பாரதிதாசன் இ) வாணிதாசன் ஈ) பாரதியார்

48) மீநுண்தொழில் நுட்பம் - என்பதன் கலைச்சொல் யாது ?

அ)Biotechnology ஆ) Nanotechnology இ) Space Techonology ஈ) Cosmic Technology

49) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம் - இத்தொடரிலுள்ள வழுவமைதி

அ) இடவழுவமைதி ஆ) பால்வழுவமைதி இ) திணைவழுவமைதி ஈ) காலவழுவமைதி

50) பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் - என்ற நூலின் ஆசிரியர்

அ) ஹாக்கிங் ஆ) தமிழ்ச்செல்வன் இ) நீலமணி ஈ) சிவராம்.

விடைகள் :

1) ஆ 2) ஈ 3) இ 4) அ 5) ஆ 6) அ 7) ஈ 8) இ 9) ஆ 10) இ

11) ஆ 12)ஈ 13)ஆ 14)இ 15)ஈ 16)ஆ 17)அ 18)இ 19)ஆ 20)அ

21) ஈ 22)இ 23)ஆ 24)இ 25)அ 26)ஆ 27)இ 28)ஈ 29) ஆ 30)அ

31) ஈ 32)அ 33)ஆ 34)ஈ 35)இ 36)ஆ 37)ஆ 38)ஈ 39)இ 40)ஈ

41) ஆ. 42)இ 43)ஆ. 44)ஈ 45)இ 46)அ 47)ஈ 48)ஆ 49)ஈ 50)இ

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்,

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் ),

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி,

கும்பகோணம் -612001.

தொடர்புக்கு - 9443740120 . email : sjkavin08@gmail.com

www.Padasalai.Net